**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நிய-ாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-கழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையா-கவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உர-ிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| **உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2023 பெப்ரவரி 13 ஆம் திகதிய இலக்கம் 23/9/22 என்ற அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் உள்நாட்டு | கணக்குகள் தயாரிக்கின்ற சந்தர்ப்பம் வரையிலும் பீடம் ஒன்றாக வழங்கப்பட்ட திகதி | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ விஞ்ஞான நிறுவனம் 2023 மார்ச் 01 ஆம் திகதி முதல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடம் ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 06 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தொடர்பாக குறித்த தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 426,779 தொகையில் கிடைத்த வட்டியாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழும், பெறுமதி ரூபா 990,000 ஆன நன்கொடைகள் காசு நன்கொடைகளாகவும் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கின்ற மிகை அல்லது பற்றாக்குறையை இனங்காண்பதற்காக முழுமையான முதலீட்டு வட்டியின் அளவு மிகையில் குறைக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த மொத்த தொகையும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 74 மற்றும் 75 ஆம் பந்திகளின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய பொருளாதார நலன்கள் அல்லது சேவைத் திறன்களை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கைகளை வெளிப்படுத்துகின்ற வகையில் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு முறைமை வருடாந்தம் மீளாய்வு செய்யவேண்டி இருந்த போதிலும் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களில் பின்பற்றப்படுகின்ற முறைமையைக் கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் அல்லது ஐந்து ஆண்டிற்கும் ஒரு தடவை மீள்மதிப்பீடு மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யும் முறைமை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். எனினும் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் சரியாக மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக இழிவுப் பெறுமதி பூச்சிய கிரயமான ரூபா 28,201,359 ஆன நூலகப் புத்தகங்கள் தொடர்ந்தும் பயன்பாட்டில் காணப்பட்டது. | எதிர்காலத்தில் நூலகப் புத்தகங்களின் மீள்மதிப்பீடு தொடர்பாக ஏனைய பல்கலைக்கழகங்களில் அமுல்படுத்தப்படுகின்ற முறையைக் கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான முகாமையாளர் தரப்பு மற்றும் அவர்களை உள்ளடக்கிய ஊதியங்கள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 1,240,000 பெறுமதியான கற்பனைச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் தனியாக காண்பிக்கப்படாமல் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கற்பனைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,240,000 அளவு மாத்திரமாக இருந்தது. அந்தப் பெறுமதியின் காரணமாக கணக்குகளில் எந்தவொரு தாக்கமும் ஏற்படவில்லை. பெறுமானத் தேய்வு விகிதத்திலும் வேறுபாடுகள் காணப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. நிதிப் பிரமாணம் 772 மற்றும் 2022 செப்டம்பர் 09 ஆம் திகதிய இலக்கம் 10/2022 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | வருடாந்தம் பொருள் மெய்மை ஆய்வுகளில் இனங்காணப்பட்ட முரண்கள் மற்றும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 மற்றம் 2022 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வு பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2023.03.01 ஆந் திகதியில் இருந்து உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனம், உள்நாட்டு மருத்துவ பீடமாக மாற்றப்பட்டமையினால் இந்த நிறுவனத்தின் சொத்துக்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் யூலை 15 ஆந் திகதிக்கு முன்னர் அதனை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆம் திகதிய | செயல்நிமித்தக் கட்டுநிதி ஒரு சந்தர்ப்பத்தின் போது | முகாமைத்துவ சபை அங்கத்தவம் வகிப்பவர்களின் படிகளைச் | நிதிப் பிரமாணம் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கம் 03/2015 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 100,000 ஆகக் கூடிய அளவுவரை மாத்திரம் விநியோகிக்க முடியுமாக இருந்த போதும் அதற்கு முரணாக 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 114,000 வீதம் உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | செலுத்துவதற்காக இந்த பணம் பெறப்பட்டுள்ளது. கணக்காய்வு குழுவுடன் கலந்துரையாடிய பின்னர் நேரடியாக வங்கிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுற்றறிக்கை | | | |
| i. | 2023 சனவரி 18 ஆம் திகதி இலக்கம் BD/HRD/126/214/19/2023 என்ற திறைசேரி செயலாளரால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சுற்றறிக்கைக் கடிதம் | பிணை முறிகளை மீறியதன் அடிப்படையில் அறவிடப்படுகின்ற பணம் கிடைத்தவுடன் திறைசேரிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் ரூபா 4,230,939 தொகை நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 737 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய இலக்கம் 04/2019 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம் | உரிய அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32,950,223 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மிகைப் பணம் முதலீட்டுக் கணக்கில் ரூபா 32,950,223.00 ஆக சாதகமான மீதி ஒன்றாக நான்கு வங்கிக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்ட பணமே காண்பிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | 2018 மார்ச் 19 ஆம் திகதிய இலக்கம் 01/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 2021 ஆம் ஆண்டின் போது வாகன விற்பனையால் கிடைத்த ரூபா 1,327,500 தொகை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்படவில்லை. | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்குச் சொந்தமான காணியில் இருந்து 10.08 பேர்ச் பகுதி 2014 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டு பெறப்பட்ட பணம் 2013 யூன் 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டு மருத்துவ நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்த பண தேவைகளுக்காக அந்தப் பணத்தை ஈடுபடுத்த வேண்டியிருந்த போதும் நிறுவனத்தின் நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இரண்டு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 16,407,211 ஆக காணப்பட்டது. | நிறுவனத்திற்கு சொந்தமான காணியின் ஒரு பகுதி அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பணத் தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படாமல் நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் படி உள்நாட்டு மருத்துவ நிறுவகத்திற்கு மாற்றுவதற்கு மாத்திரம் அங்கீகரிக்கப் பட்டிருந்தமையால் மாதாந்த நிதித் தேவைக்காக அந்தப் பணம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,565,628 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,097,926 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,663,554 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரச மானிய பெறுவனவுகள் அதிகரித்தமை மற்றும் முதலீட்டுக்கான வட்டி பெறுவனவு அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கடந்த ஆண்டில் 4.1 ஆகக் காணப்பட்ட நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 2.9 வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 24 வருட காலம் முதல் மாணவர் விடுதி ஒன்று நடாத்திச் செல்லப்படுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய கட்டிடத்துடனான காணி 2023 மே மாதம் வரை உள்நாட்டு மருத்து விஞ்ஞான நிறுவனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கையேற்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மாணவர்களுக்கு வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 5,602,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 90 Tab கணனிகளுக்கு மாணவர்களுடன் | உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு வருட காலத்திற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் தவறினால் | உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 2023 யூன் 27 ஆம் திகதியளவில் காலாவதியாகி இருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் கணனியை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது மீண்டும் உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கோ 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையிலும் நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் புதுப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய இலக்கம் 17/1578/716/031 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சிக்கன பங்களிப்பு தொழில்நுட்பம் (NERD Technology) பயன்படுத்தி ரூபா 50 மில்லியன் உச்ச அளவின் கீழ் விரிவுரை, திட்டமிடல் மற்றும் நிர்மாணங்கள் இலங்கை பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (NERDC) இற்கு ரூபா 47,588,255 (வரியின்றி) மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் மூன்று மாடிகளை உடைய கட்டிடம் 321 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு 2022 இன் போது கையளிக்கப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையில் 522 நாட்கள் கடந்திருந்ததுடன் ரூபா 58,868,965 செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்டிக்கையின் 04 ஆம் பந்திக்கு முரணாக அங்கீகாரம் இன்றி NERD நிறுவனத்தால் இதற்காக உப ஒப்பந்தகாரர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமைகளின் காரணமாக அதிக காலம் எடுத்திருந்த போதிலும் 150 நாள் காலத்தை நீடிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சேவை வழங்குநருக்கு சட்ட ரீதியாக அறிவிக்காதிருந்ததுடன் நிறுவனம் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றாக இருந்தமையால் அவர்களுக்கு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் காணப்படவில்லை. | கிரயத்தை குறைக்கும் வகையில் நிர்மாண நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த 79 செயற்பாடுகளில் 44 செயற்பாடுகளை பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் 50 சதத்தைவிட குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட பணவீக்க நிலைமை மற்றும் தொற்று நோய் நிலைமையின் காரணமாக துறைசார் சுற்றுலா செயலமர்வுகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளல் வரையறுக்கப்பட்டமை, நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை மற்றும் குறைப்பு என்பவற்றின் காரணமாக செயல்முன்னேற்றம் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் ஆயுர்வேதம் மற்றும் யூனானி பட்டங்களைப் பயிலுகின்ற மாணவர்கள் நிறுவனத்தை விட்டு வெளிச் செல்லம் சதவீதம் 12 சதவீதம் முதல் 27 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | உள்நாட்டு மருத்துவ பீடத்திடத்தின் ஆயுர்வேத மற்றும் யூனானி பட்டங்களைப் பின்பற்றுகின்ற மாணவர்கள் ஏனைய பட்டப் பாடநெறிகளுக்கு தொடர்புபடுத்துதல், தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் பட்டப் பாடநெறி இரத்துச் செய்யப்பட்டமை, பரீட்சைகளில் சித்தியடையாமை போன்றவற்றின் காரணமாக விலகிச் செல்லும் சதவீதம் அதிகரித்திருந்தது. | மாணவர்கள் நிறுவனத்தை விட்டு விலகிச் செல்லும் சதவீதத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |